# பத்திரிக்கைச் செய்தி

## புதிய மின் இணைப்பு கொடுப்பதற்கு ரூ.15,000/- லஞ்சம் பெற்ற உதவி பொறியாளர் கைது

***

திருவள்ளூர் மாவட்டம் ரெட்கில்சை சேர்ந்த பிரேம் சாகர் என்பவர் புதுநகர், புள்ளிலைன் கிராமம், வடகரையில் வசித்து வருகிறார். இவர் புதிதாக நான்கு பகுதிகள் கொண்ட வீட்டினை கட்டியுள்ளதாகவும், அதில் மூன்று மின் இணைப்புகள் ஏற்கனவே பெற்றுவிட்டதாகவும், மீதமுள்ள ஒரு பகுதிக்கு புதிதாக மின் இணைப்பு பெற திருவள்ளூர் மாவட்டம் ரெட்கில்சில் விண்ணப்பத்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.கணேசன், உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம், ரெட்கில்ஸ் செக்ஷன்-2 என்பவர் தனக்கு ரூ.15,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருவள்ளூர் பிரிவு அலுவலகத்தை அணுகி புகார் மனு அளித்தார். இப்புகாரின் மேல் இன்று 13.01.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு.கணேசன், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.15,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். மேலும் திரு.கணேசன் அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.42,000/- கைப்பற்றப்பட்டது.